பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
16. 07. 2024 7 .15
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குறைந்த கட்டணத்தில், அனைத்துத் தரப்பினருக்கும் விமானப் பயணத்தை வழங்குவது மத்திய அரசின் முன்னுரிமையாக உள்ளது என சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

2. வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக இன்று மொரீஷியஸ் செல்கிறார்.

3. இத்தாலியில் நடைபெறும் ஜி-7 வர்த்தக அமைச்சர்கள் கூட்டத்தில் மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இன்று பங்கேற்கிறார்.

4. அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுவது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

5. நாட்டின் மேற்கு கடலோரப் பகுதிகளின் சில இடங்களில் இன்று அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

குறைந்த கட்டணத்தில், அனைத்துத் தரப்பினருக்கும் விமானப் பயணத்தை வழங்குவது மத்திய அரசின் முன்னுரிமையாக உள்ளது என சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கிஞ்சரப்பு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

ஆசிய பசிபிக் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் மாநாடு தொடர்பாக புதுதில்லியில் நேற்று நடைபெற்ற அறிமுக நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், அனைத்துப் பகுதிகளிலும் விமான இணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் அரசு செயலாற்றி வருவதாகத் தெரிவித்தார்.

நாட்டின் விமான பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு சந்தை 2030-ம் ஆண்டுக்குள் 4 பில்லியன் டாலரை எட்டும் என்று அவர் கூறினார்.

இந்தியாவை உலகின் முன்னணி விமான போக்குவரத்து மையமாக மாற்றுவதே அரசின் நோக்கம் என்று அவர் குறிப்பிட்டார்.

விமானம் மற்றும் விமான இன்ஜின் பாகங்களுக்கு ஒரே மாதிரியாக 5 சதவீத ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி விகிதத்தை அரசு அமல்படுத்தியுள்ளது எனவும் இது இந்த தொழில் துறைக்கு மேலும் ஊக்கமளிக்கும் என்றும் அவர் கூறினார்.

இரண்டாவது ஆசிய பசிபிக் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர்கள் மாநாடு செப்டம்பர் 11 மற்றும் 12-ம் தேதிகளில் புதுதில்லியில் நடைபெற உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதில் 40 நாடுகள் பங்கேற்கவுள்ளதாக திரு ராம் மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களிடையே ஆரோக்கிமான உணவுப் பழக்கங்களை ஏற்படுத்துவதில் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமான எஃப்.எஸ்.எஸ்.ஏ.ஐ. முக்கிய பங்காற்ற வேண்டும் என மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.

இந்த ஆணையத்தின் பல்வேறு முன்முயற்சிகள் குறித்து புதுதில்லியில் நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

உணவுப் பாதுகாப்பு தொடரபான அம்சங்கள் குறித்து உரிய விவரங்களுடன் நுகர்வோருக்கு தகவல்களை வழங்க வேண்டியது முக்கியம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில், வெவ்வேறு பகுதிகளில் மாறுபட்ட உணவுப் பழக்கவழக்கங்கள் உள்ளன என்றும், இந்த பன்முகத்தன்மைக்கு ஏற்ப உணவுப் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளை வடிவமைக்க வேண்டும் என்று திரு ஜேபி நட்டா கூறினார்.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக இன்று மொரீஷியஸ் செல்கிறார்.

இந்தப் பயணத்தின்போது, மொரீஷியஸ் பிரதமர் திரு பிரவிந்த் ஜுக்னாத்தை சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

மொரீஷியஸின் மூத்த அமைச்சர்களுடனும் திரு ஜெய்சங்கர் பேச்சு நடத்தவுள்ளார்.

பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தப் பயணம் உதவும் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இத்தாலியில் நடைபெறும் ஜி-7 வர்த்தக அமைச்சர்கள் கூட்டத்தில் மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இன்று பங்கேற்கிறார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் உலகளாவிய வர்த்தக ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஜி-7 நாடுகளின் அமைச்சர்களும், சிறப்பு அழைப்பாளர் நாடுகளின் அமைச்சர்களும் ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

இந்த மாநாட்டிற்கு இடையே ஜி-7 நாடுகளின் வர்த்தக அமைச்சர்களுடன் இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவது குறித்தும் திரு. பியூஷ் கோயல் பேச்சு நடத்த உள்ளார்.

<<<<>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் பிரதமரின் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விரைந்து மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு திரு மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மின்திட்டங்கள் தொடர்பாக டேராடூனில் நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

உத்தரகாண்ட் அரசு நீர்மின் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருவதாக திரு மனோகர் லால் பாராட்டுத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி, மாநிலத்தில் 24 மணி நேரமும் தடையற்ற மின்சாரத்தை விநியோகிக்க மாநில அரசு உறுதிபூண்டு செயலாற்றி வருவதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

நாகாலாந்து மாநிலத்தில் நீர்வழித்தடங்கள் மேம்படுத்தப்படும் என்று மத்திய கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

நாகாலாந்தின் நீர்வழித் தடங்களை மேம்படுத்தும் நோக்கில் திமாப்பூரில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அவர் பங்கேற்றார்.

நாகாலாந்தில் உள்ள திஸு ஸுன்கி ஆற்றில் சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து ஏற்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

நீர்வழித் தடங்கள் மூலம் வடகிழக்குப் பகுதிகளுக்கு இடையேயான இணைப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் திரு சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தியில் சுயசார்பை எட்டுவதுடன் உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியாவை மாற்றும் நோக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் திரு சஞ்சய் சேத் கூறியுள்ளார்.

பெங்களூருவில் உள்ள இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் மற்றும் பிஇஎம்எல் நிறுவனங்களை நேற்று அவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அவர், நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஏற்ப பாதுகாப்பு உற்பத்திப் பொருட்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சுயசார்பு இலக்கை எட்ட தனியார் துறையுடனான ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்றும் திரு சஞ்சய் சேத் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் நடப்பு கரீஃப் பருவத்தில் 575 லட்சம் ஹெக்டேரில் பயிர்கள் நடவு செய்யப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 521 லட்சம் ஹெக்டேரில் மட்டுமே பயிர்கள் நடவு செய்யப்பட்டு இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருப்பு சாகுபடி இந்த ஆண்டு 62 லட்சம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்படுவதாகவும் கடந்த ஆண்டு இது 50 லட்சம் ஹெக்டேராக இருந்தது எனவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் நெல் நடவு 95 லட்சம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்டதாவும் இந்த ஆண்டு அது 115 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது எனவும் வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

50 ஆண்டு காலத்தில் நடைபெறும் வளர்ச்சித் திட்டங்களை டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பின் மூலம் இந்தியா 9 ஆண்டுகளில் செயல்படுத்தியுள்ளது என்று இந்தியாவின் ஜி-20 ஷெர்பா திரு அமிதாப் கந்த் கூறியுள்ளார்.

டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு குறித்த இந்தியாவின் ஜி-20 பணிக்குழுவின் இறுதி அறிக்கையை புதுதில்லியில் நேற்று அவர் வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், டிஜிட்டல்மயமாக்கலில் இந்தியா முன்னணியில் உள்ளது என்றார்.

டிஜிட்டல் பணப் பரிமாற்றத்தில் இந்தியா உலக அளவில் முன்னணியில் உள்ளது என்று திரு அமிதாப் கந்த் தெரிவித்தார்.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலம் பிஜாப்பூர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சோதனைகளின்போது 12 மாவோயிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள், கொலை, கொலை முயற்சி, கொள்ளை, கடத்தல் போன்ற சம்பவங்களில் ஈடுபட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

இந்தியா – ஜெர்மனி வெளியுறவுத்துறை அதிகாரிகள் நிலையிலான கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி மற்றும் ஜெர்மன் வெளியுறவுத்துறை செயலாளர் திரு. தாமஸ் பாகர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, அறிவியல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

மண்டல மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

பாலஸ்தீன அகதிகளின் மறுவாழ்வுக்காக இந்த ஆண்டுக்கான ஐநா நிவாரணப் பணி முகமைக்கு முதல் தவணையாக 2.5 மில்லியன் டாலரை இந்தியா விடுவித்துள்ளது.

ஐ.நா.வின் முக்கிய திட்டங்கள் மற்றும் சேவைகளுக்கு 5 மில்லியன் டாலர் தொகையை வழங்க உள்ளதாக தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன அகதிகளுக்கு சுகாதாரம், கல்வி, சேவைகள் ஐ.நாவின் இந்தப் பணியில் மேற்கொள்ளப்படுகிறது.

<<<<>>>>

சிரியாவில் நாடாளுமன்ற தேர்தல் நேற்று நடைபெற்றது.

250 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு ஆயிரத்து 516 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

எட்டாயிரத்து 151 வாக்குச் சாவடி மையங்களில் வாக்குப் பதிவு நடைபெற்றது.

தேர்தல் முடிவுகள் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

ருவாண்டாவில் அதிபர் தேர்தல் நேற்று நடைபெற்றது.

வாக்கு எண்ணிக்கை தற்போது நடைபெற்று வரும் நிலையில் அந்நாட்டு அதிபர் திரு ககாமே முன்னிலையில் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

<<<<>>>>

கிழக்கு ஆஃப்கனிஸ்தானின் நங்கர்ஹார் மாகாணத்தில் நேற்று ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 35 பேர் உயிரிழந்தனர்.

250-க்கும் மேற்பட்டோர் மழை தொடர்பான சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்நாட்டின் குனார் மாகாணத்தில் கனமழையால் நேற்று ஏற்பட்ட வெள்ளத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

இலங்கையில் மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட கட்டணங்களின் அடிப்படையில் 22 சதவீதம் மின் கட்டணம் குறைக்கப்படுவதாகவும் இது இன்று முதல் அமலுக்கு வருவதாகவும் அந்நாட்டின் மின் துறை அமைச்சர் திரு காஞ்சனா விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

காலாண்டுக்கு ஒரு முறை மின்கட்டணத்தை மறு ஆய்வு செய்யும் அரசின் கொள்கையின் அடிப்படையில் இந்த கட்டணக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மின்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுவது உறுதியாகி உள்ளது.

நேற்றிரவு மில்வாக்கியில் நடைபெற்ற வாக்கெடுப்பில் அவர் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றதையடுத்து குடியரசு கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளராக திரு. ட்ரம்ப் அறிவிக்கப்பட்டுள்ளார்.

2016ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு. டொனால்ட் ட்ரம்ப், 2020ஆம் ஆண்டு தோல்வியடைந்தார்.

தற்போது தொடர்ந்து 3வது முறையாக அவர் தேர்தலில் போட்டியிட உள்ளார்.

<<<<>>>>

நாட்டின் மேற்கு கடலோரப் பகுதிகளின் சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத், மகாராஷ்டிரா, கடலோர கர்நாடகா, தெற்கு உள் கர்நாடகம் ஆகிய பகுதிகளின் சில இடங்களில் அதிகனமழை பெய்யக்கூடும் என அந்த மையம் கூறியுள்ளது.

தெலங்கானா, ஆந்திரா, சத்தீஸ்கட் ஆகிய பகுதிகளின் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

ஒடிசாவை ஒட்டிய கடற்கரைப் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி இருப்பதாகவும், இதன் காரணமாக பருவமழை தீவிரமடைந்துள்ளது என்றும் வானிலை ஆய்வு மையத்தின் மூத்த விஞ்ஞானி திரு. ஆர்.கே. ஜெனமணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

ஸ்வீடிஷ் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் - சுவீடனின் **Elias Yemer**-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

**<<<<The End>>>>**